# சமகாலக் கிறிஸ்தவச் செல்நெறிகளின் பின்புலங்கள்

## யோ. கி. போல் றொகான்



**சமகாலக் கிறிஸ்தவச் செல்நெறிகளின் பின்புலங்கள்**

| | |
|---|---|
| ஆசிரியர்: | அருட்கலாநிதி யோ.கி. போல் றொகான் |
| மொழி: | தமிழ் |
| விடயம்: | வரலாறு, இறையியல், மெய்யியல் |
| முதற் பதிப்பு: | 2021 |
| பக்கங்கள்: | xvii + 111 |
| வெளியீடு: | நல்லாயன் நிலையம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்) திருநெல்வேலி |
| உரிமை: | வெளியீட்டாருக்கு |
| அச்சகம்: | ஜே. எஸ். அச்சகம், பண்டத்தரிப்பு |
| விலை: | ரூபா 300/- |
| ISBN: | 978-624-96945-4-5 |

**The Backgrounds of Current Christian Trends**

| | |
|---|---|
| Author: | Rev. Dr. J.C. Paul Rohan |
| Language: | Tamil |
| Subject: | History, Theology, Philosophy |
| First Publication: | 2021 |
| Pages: | xvii + 111 |
| Publisher: | Good Shepherd Centre (Catholic Chaplaincy of the University of Jaffna) Thirunelvely |
| Copy Right: | To the Publisher |
| Printer: | J.S. Printers, Pandatharippu |
| Price: | Rs. 300/- |
| ISBN: | 978-624-96945-4-5 |

# முகவுரை

கிறிஸ்தவம் ஒரு முழுமையான, நிறைவான வெளிப்படுத்தலையுடைய வரலாற்றுச் சமயம். ஒரு சமயத்திற்கு இருக்கவேண்டிய அனைத்துப்பண்புகளையும் உள்ளடக்கியது. ஆனால் அது ஒரு முழுமையான நிலையில் இவ்வுலகில் அறிமுகப்படுத்தப்படவில்லை. நிறைவான ஒரு சமயமாக வானிலிருந்து நேரடியாக இறங்கி வந்ததும் அல்ல. குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் இயேசுக்கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட ஒரு சமயமாகவே கிறிஸ்தவம் உலக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வுலகில் ஒரு சிறு விதைபோல வீசப்பட்டு, சாதாரண ஓர் இயக்கமாக இயேசுக்கிறிஸ்துவாலும், அவரின் திருத்தூதர்களாலும் அத்திவாரமிடப்பட்டதே கிறிஸ்தவம்.

ஏனைய உலக நாகரிகங்கள், நிறுவனங்கள் மற்றும் சமயங்கள் போலக் கிறிஸ்தவமும் வரலாற்றில் பரிணாமங்களுக்குட்பட்டு, பல்பரிமாணநிலைகளுக்கூடாக வளர்ச்சியடைந்தது. உலக வரலாற்றுச் செல்நெறிகள் அதனைச் செதுக்கின. உலக நிகழ்வுகள் அது பயணிக்கவேண்டிய

திசையை அவ்வப்போது நிர்ணயஞ்செய்தன. உலகின் ஏனைய சமயங்களும், மெய்யியல்களும், கோட்பாடுகளும் அதற்குள் ஊடுருவின. உலக வரலாற்றுக் காலகட்டங்களின் சமூக, அரசியல், பொருளாதார, காலசாரச் சூழமைவுகள் கிறிஸ்தவத்தின் கோட்பாடுகளின் உருவாக்கத்திலும், உள்ளடக்கத்திலும் பாரிய பங்களிப்புச் செய்தன. குறிப்பாகக் கிறிஸ்தவ வரலாற்றுக்கு முந்திய யூத, கிரேக்க, உரோமைய நாகரிகங்கள் உலக வரலாற்றின் பின்னைய நிலைகளில் அறிமுகமான கிறிஸ்தவ நாகரிகத்தின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் பிரதான செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமைந்தன.

கடவுள் மற்றும் தெய்வீகம் பற்றிய விசாரணைகளைப் பிரதானமாக உள்ளடக்கியிருப்பதுவே ஒரு சமயத்தின் அடிப்படை இயல்பு. ஆயினும் எவ்வளவுதான் தெய்வீகத் தன்மையுடையதாக ஒரு சமயம் இருந்தாலும் உலகின் வரலாற்றுச் செல்நெறிகளிலிருந்தும், அது இருப்புக் கொள்ளும் பிரதேசத்தின் போக்குகளிலிருந்தும் தப்பிக்க முடியாது. சமயநிலைகளை நிர்ணயிப்பதில் சமயச்சார்பற்ற உலகியற் செல்நெறிகளும் பாரியபங்களிப்பை வழங்கியதை உலகின் சமய வரலாறுகள் தெளிவாக முன்வைக்கின்றன. கிறிஸ்தவமும் ஒரு சமயமாகத் தன்னை உலகில் நிலைநிறுத்தியிருப்பினும் அதனது சமயக்கோட்பாடுகளும், நடைமுறைகளும் அதனது உலக வரலாற்றுக் காலகட்டங்களின் செல்நெறிகளால் வடிவமைக்கப்பட்டவை என்பதை மறுக்கமுடியாது.

கிறிஸ்தவத்தின் சமயக் கோட்பாடுகளில் பிரதான பங்கு வகிக்கும் கிறிஸ்தவ இறையியல் ஆரம்பத்தில் இருந்து சமகாலம் வரை உலகின் வரலாற்றுச் செல்நெறிகளுக்கேற்பவே தகவமைக்கப்பட்டு வந்துள்ளமை கண்கூடு. உதாரணமாகக் கிறிஸ்தவத்தின் தொடக்கக் காலத்தில் உலகியல் ரீதியாகப் பிரபலமடைந்திருந்த கிரேக்க மெய்யியலும், அதன் கல்விப்புல வளங்களுமே கிறிஸ்தவக் கோட்பாடுகளிலும், குறிப்பாகக் கிறிஸ்தவ இறையியலிலும் செல்வாக்குச் செலுத்தின. இவ்வாறு ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவ இறையியல் அக்காலங்களுக்குரிய

சமூக, அரசியல், பொருளாதார, கலாசார, அறிவியற் பின்புலங்களை மையமாகக் கொண்டே உருவாகியுள்ளன. தற்போதைய கிறிஸ்தவ இறையியல் உள்ளடக்கியிருக்கும் நேர்த்தியான பெருவளங்கள் ஒரேயடியாகக் கட்டமைக்கப்பட்டவையோ அல்லது வெளிப்படுத்தப்பட்டவையோ அல்ல. அவை படிப்படியாக உலக வரலாற்றுச் செல்நெறிகளின் போக்கிற்கேற்பச் செதுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டவை. இவ்வாறான இறையியல்களே கிறிஸ்தவத்தை ஒரு முதிர்ச்சியான, உலகளாவிய தன்மையுள்ள, மக்கள் மையமான ஒரு சமயமாக மாற்றின என்பதிலும் மாற்றுக் கருத்துக்கிடமில்லை.

கிறிஸ்தவத்தின் தொடக்ககால இறையியலில் அக்காலக் கிரேக்கக் கல்விப்புலப் பின்புலங்களும், மத்தியகால ஆரம்ப இறையியலில் கிழக்கு உரோமானியப் பைசன்ரைன் பின்புலங்களும், மத்தியகாலத்தின் உச்சநிலையான பன்னிரண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறையியலில் ஐரோப்பா முழுவதையும் ஆட்சிபுரிந்த கிறிஸ்தவப் பேரரசு மற்றும் ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களினது பின்புலங்களும் செல்வாக்குச் செலுத்தின. அவற்றோடு இணைந்த வகையில் சமகால இறையியற் செல்நெறிகளின் பின்புலங்களை வரையறுக்கும் ஒரு ஆய்வாகவே இந்நூல் அமைகிறது.

இறைமையமாக விளங்கிய இறையியற் கற்கைநெறியானது ஒருங்கிணைந்த நிலையில் மனிதமையமாகவும், முழுப்பிரபஞ்சம் சார்ந்ததாகவும் மாறிய தன்மை, அதற்கான தேவைகள், பின்புலங்கள் ஆகியவற்றை உருவாக்கிய காரணிகள் இந்நூலில் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. நவீனத்துவத்தையடுத்து ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் அறிவியற் கோட்பாடுகளினால் உருவான பின்புலங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. இவ் ஆய்வின் விரிவுக்கஞ்சி சமயரீதியில் அமைந்த பின்புலங்கள் பிரதான தலைப்புக்களாக அமையவில்லை. சமகாலக் கிறிஸ்தவச் செல்நெறிகளின் உருவாக்கத்தின் பின்புலத்தில் இஸ்லாமிய எழுச்சிகளும், சீர்திருத்தச் சபைகளின் அதிகரிப்பும் சமயரீதியில் பிரதானமாக

அமைந்திருந்தன. அவைகள் மனித வாழ்வுச் சூழமைவு சார்ந்த மானிடமைய இறையியல்களுக்குச் சமாந்திரமாக கிறிஸ்தவ ஒன்றிப்பு, சமயங்களுக்கிடையிலான உரையாடல் பற்றிய இறையியற் செல்நெறிகளை உருவாக்கி வளர்த்தன. அத்தகைய உள்ளடக்கங்கள் பிறிதொரு களத்தை இவ் ஆய்வில் திறக்க நிர்ப்பந்திக்கும் என்பதனால் அவைகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

நவீனத்துவம் உலகளாவிய ரீதியில் உருவாக்கிய சமூக, பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் அறிவியற் கோட்பாடுகளின் பின்புலங்களை ஆய்வு செய்வதன் மூலமாக அவைகள் உருவாக்கிய சமகால இறையியற் செல்நெறிகளின் போக்குகள், அவற்றின் உள்ளடக்கங்கள், மனித வாழ்வுச் சூழமைவுகள் சார்ந்த இறையியலாக்கத் தேவைகள், அவை விடுக்கும் சவால்கள் போன்றவற்றைப் புரிந்து கொள்ளமுடியும். இறை - மனித உறவுச் சங்கமமாகப் பிரவாகிக்கும் இறையியலே யதார்த்தமானது என்ற உண்மையும் வலியுறுத்தப்பட முடியும்.

***

இந்நூலுக்குத் தென் இந்தியத் திரு அவையின் யாழ்ப்பாண மறைமாட்டப் பேராயர் அருட்கலாநிதி S. ஜெபநேசன் அவர்கள் வழங்கிய அணிந்துரை ஒரு மேலதிக உந்துதலை அளிக்கிறது. ஆயர் அவர்கள் யாழ்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறையோடு நீண்டகாலப் பரிச்சயமுடையவர். கிறிஸ்தவக் கற்கையானது யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் ஓர் அலகாக ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதலாவது இணைப்பாளராகச் செயற்பட்டவர். கிறிஸ்தவ இறையியல், வரலாறு, இலக்கியங்கள் போன்ற பல கிறிஸ்தவக் கற்கைகள் சார்பான தலைப்புக்களில் தரமான கல்விப்புல ஆய்வுகளை மேற்கொண்டவர். சமகாலக் கிறிஸ்தவச் செல்நெறிகள் பற்றிய ஆக்கபூர்வமான பிரக்ஞைகள் கொண்டவர். தனது நீண்ட இறையியல் அனுபவத்தின் அடிப்படையில் தனது அணிந்துரை மூலமாக இந்நூலை அணிசெய்தமைக்காக மனமார்ந்த நன்றிகள்.

***

இந்நூலை எனது முதலாவது பெரிய குருமட அதிபர் அமரர் அருட்கலாநிதி பிலிப் பொன்னையா அவர்களுக்குச்

சமர்ப்பணமாக்குவதில் நிறைவடைகின்றேன். அவர் ஒரு மனவைராக்கியமுள்ள, அர்ப்பணம் நிறைந்த 'இரும்பு மனிதன்'. தான் வரித்துக்கொண்ட கொள்கைகளுடன் ஒருபோதும், எந்நேரத்திலும் சமரசம் செய்து கொள்ளாதவர். தனது வாழ்வால் மாணவர்களுக்கு உதாரணம் காட்டியவர். அவர்களின் நினைவுகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்!

**அருட் கலாநிதி யோ.கி. போல் றொகான்**
தலைவர்
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்
இலங்கை.